| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF Science for Sustainable Development | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
| | மாவட்டம் : | **மதுரை** | காலம் : | **29/05/2024** | முதல் | **02/06/2024** |
| | அறிக்கை எண் : | **043/ 2024** | வெளியீட்டு நாள் : | **28/05/2024** | | |

## மதுரை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 34°-37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26°-27° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| **கடந்தவார வானிலை** (23.5.2024 **முதல்** 27.05.2024) | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 02-06-2024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23/05 | 24/05 | 25/05 | 26/05 | 27/05 | **தேதி** | **நாள்-1** 29/05 | **நாள்-2** 30/05 | **நாள்-3** 31/05 | **நாள்-4** 01/06 | **நாள்-5** 02/06 |
| 0.4 | 0.5 | 0.4 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 2 | 2 | 5 | 5 | 3 |
| 36 | 34 | 36 | 35 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 37 | 37 | 36 | 35 | 35 |
| 26 | 26 | 27 | 27 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 27 | 26 | 26 | 25 | 25 |
| 7 | 6 | 8 | 7 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 5 | 8 | 8 | 8 |
| 90 | 82 | 88 | 65 | 66 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 82 | 59 | 57 | 55 | 51 | | 40 | 40 | 40 | 40 | 40 |
| 8 | 3 | 6 | 8 | 6 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 12 | 12 | 6 | 8 | 10 |
| தென் கிழக்கு | 0 | மேற்கு | வட மேற்கு | வட மேற்கு | காற்றின் திசை | மேற்கு | வட மேற்கு | மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

**குறுஞ்செய்தி :**

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 35°-37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 25° - 27° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 முதல் 12 கி.மீ வேகத்தில்,மேற்கு, வடமேற்கு மற்றும் தென்மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

**பொது ஆலோசனை:**

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (31 மே - 06 ஜூன் 2024):**

**மழைப்பொழிவு :**

31-05-2024 - 06-06-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

31-05-2024 - 06-06-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது இயல்பானது முதல் இயல்பை விட சற்று குறைந்து காணப்படும்.28° செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

31-05-2024 - 06-06-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 6 முதல் 12 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

29 மே முதல் 31 மே வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது 2- 3° செல்சியஸ் செல்சியஸ் அதிகரித்து காணப்படும். 35° செல்சியஸ் முதல் 37° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : நெல், கரும்பு, கால்நடை.**

**நெல்:**

தற்போது நிலவும் வானிலையின் காரணமாக சம்பா நெல்லில் ஆனைக்கொம்பன் ஈ தென்படுகிறது. இதனால் பயிரின் குருத்து பகுதி வெங்காயதாள் போல் மாறி கதிர் வெளி வராது.

இதனை கட்டுப்படுத்த ஒரு ஹெக்டறேக்கு 100 கிராம் என்ற அளவில் தயமெதாக்சம் 25% WG மருந்தினை பயன்படுத்தவும்.

**கரும்பு:**

தற்போது நிலவும் பருவ சூழ்நிலையில் கரும்பு பயிரில் போக்கிடங்களை நிரப்புதல் முக்கியமாகும்.

வயலில் போக்கிடங்கள் இருந்தால் நடவு செய்த 30 நாட்களுக்குள் முளைத்த இரண்டு பதியம் கரணைகளையோ அல்லது 15-20 நாட்களான பாலித்தீன் பை நாற்றுகளை கொண்டோ சந்து நிரப்பி நடவு செய்திட வேண்டும்;.

போக்கிடங்களில் நடவு செய்த பிறகு மூன்று வாரங்களுக்கு வயலில் தேவையான ஈரப்பதம் இருக்குமாறு பார்த்துக் கொள்வது கரணைகள் நன்கு முளைத்து வளர ஏதுவாக இருக்கும்.

**கால்நடை:**

தற்போது நிலவும் பருவச்சூழ்நிலையில் ஆடுகளுக்கு துள்ளுமாரி நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இந்நோய் எல்லா வயது ஆடுகளையும் தாக்கும். ஆனால் இளம் வயது ஆடுகளே பெரும்பாலும் பாதிக்கப்படுகின்றன.

மழைக்குப்பின் புதிதாக முளைத்த பசுமையான புல்வெளியில் மேய்ச்சலுக்குச் செல்லும் ஆடுகளுக்கு இந்நோய் ஏற்படும். இறப்பதற்கு முன் வலிப்பு ஏற்பட்டு துள்ளி துள்ளி விழும்.

இந்நோயிலிருந்து ஆடுகளை பாதுகாக்க சூரியன் உதித்து ஒரு மணி நேரம் கழித்து ஆடுகளை மேய்ச்சலுக்கு அனுப்ப வேண்டும்.